


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
கல்முனை NET
kalmunainet.com
e paper






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் கார்த்திகை 25 [11.12.2021] இதழ் : 42

# பட்ஜெட் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றம்

## ஹக்கீம், றிஷாத் எதிர்த்து வாக்களிப்பு!

நமது நிருபர்

2022 ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று (10) இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் 3ஆம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின் போது, அதற்கு ஆதரவாக 157 வாக்குகளும், எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கமைய 2022 வரவு செலவுத் திட்டம் திருத்தங்களுடன் 93 பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

03 ஆம் வாசிப்புக்கு வாக்கெடுப்பு நடத்துமாறு எதிரணி கோரிதையடுத்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அதற்கான அழைப்பை விடுத்தார். இலத்திரனியல் முறையின் கீழ் எம்.பிக்கள் வாக்களித்தனர்.

ஆளும் தரப்புடன் பொதுஜன பெரமுன எம்.பிக்களும் கூட்டணி கட்சி 02

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மட்டக்களப்பு, கல்முனையில் ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன், ஏ. எல். எம்.ஷினாஸ் )

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பிரதேசங்களில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி மட்டக்களப்பு காந்தி பூங்கவிற்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை (10) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் 02

## அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள்

### கல்முனையில் நால்வர் அடையாளம்




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோய் ஆனது ஒருவரின் நிர்பீடண சக்தியை இல்லாதொழிக்கின்றது என கல்முனை பிராந்திய சுகாதார 02

## தடுப்பூசி பெறாதவர்களுக்கு பொது இடங்களில் அனுமதி இல்லை!

### பண்டிகைக்கு முன்னர் பூஸ்டர்களை வழங்க ஜனாதிபதி பணிப்பு

எதிர்வரும் பண்டிகையில் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த இரண்டு வாரங்களுக்குள் கொவிட்-19 தடுப்பூசியின் 3ஆவது (Booster) டோஸை வழங்கி நிறைவு செய்யுமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொவிட் ஒழிப்பு விசேட செயலணி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று (10) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய, இரண்டாவது டோஸ் தடுப்பூசியை பெற்று 03 மாதங்கள் நிறைவடைந்த அனைவரும் பூஸ்டர் டோஸினை பெறத் தகுதியுடையவர்களாகின்றனர். அதற்கமைய, தடுப்பூசி வழங்கப்படும் எந்தவொரு இடத்திலும் இன்று (11) முதல் தினமும் பூஸ்டர் டோஸாக Pfizer தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 02

## எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகள் அல்லர்!

### இந்த எண்ணக்கருவை தேரருக்கு விதைத்தோம்




முஸ்லிம்கள் எல்லோரும் தீவிரவாதிகள் அல்லர் என்கிற எண்ணத்தை ஞானசார தேரரின் மனத்தில் விதைத்து உள்ளோம் என்று கிழக்குதேசம் வஃபா பாருக் தெரிவித்தார்.

ஞானசார தேரர் தலைமையிலான ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி கடந்த வாரம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது.

இது அம்பாறை மாவட்டத்துக்கு வந்தபோது தாருஸ் சபா குழுமத்தின் ஏற்பாட்டில் அதன் தலைமையகத்தில் கல்முனையில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. 02

## ஹரீஸுடன் ஒப்பந்தம் செய்திருந்தால் நாங்கள் ஏன் நடுநிலை வகித்தோம்?

### மாநகரசபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் கேள்வி!

கல்முனையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் முரண்பாடுகளை தவிர்த்து செயற்பட்டாலே இரு சமூகத்துக்கு நன்மை.

ஒரு முடிவை எடுக்கும்போது எழுந்தமானதாக இல்லாமல் அது பல கோணங்களில் சிந்தித்து எடுக்கப்பட வேண்டும்.

எழுந்தமானதாக சிறுபிள்ளை போன்று தனிப்பட்ட சொற் தாக்குதல்களை முன்வைப்பது ஆரோக்கியமானதல்ல என கல்முனை மாநகரசபை உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் கல்முனை நெற் ஊடகத்துக்கு தெரிவித்தார். 02



## மட்டக்களப்பு மாநகரசபை பட்ஜெட் 23 வாக்குகளால் நிறைவேற்றம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாநகரசபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் இன்று வெள்ளிக்கிழமை (10) 23 வாக்குகளால் வெற்றி பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது

2022ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்திற்கான சபை அமர்வு நேற்று மாநகரசபை மண்டபத்தில் சபை முதல்வர் ரி. சரவணபவான் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, வரவு - செலவு திட்டத்தை சபை முதல்வர் முன்வைத்து வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் வரவு - செலவு திட்டத்திற்கு ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும், நடுநிலையாக ஒருவாக்கும் ஒருவர் சபை அமர்வில் சமூகமளிக்காத நிலையில் 23 வாக்களால் திட்டம் நிறைவேற்றப்பட்டது

## குற்றச்சாட்டுக்களின்றி தடுப்பில் உள்ளோரை விடுதலை செய்யுங்கள்

### சுரேன் ராகவன், ரிஷாட் எம்பிக்கள் கோரிக்கை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எவ்வித குற்றச்சாட்டுக்களும் என்று தடுத்து வைக்கப்பட்டு இருப்போரை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் ரிசாத் பதியுதீன் ஆகியோர் சபையில் கோரிக்கை விடுத்தனர்.

பாராளுமன்றத்தில் நடந்த குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இவர்கள் இருவரும், இந்த வேண்டுகோளை விடுத்ததோடு, இந்த விடயத்தில், ஜனாதிபதியும் நீதியமைச்சரும் உடன் தலையிட்டு, எவ்வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு நீதி விசாரணை நடத்தி விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். 10

# கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் பூரண திருப்தி

## ஞானசாரரின் செயலணி தெரிவிப்பு:

## ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு

**நமது நிருபர்**

ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் குறித்த பூர்வாங்க அறிக்கை இம் மாத இறுதியில் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவுக்கு சமர்பிக்கப்படுகிறது என்று இச்செயலணியின் முன்னிலை உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் நந்தன விஜேசிங்க தெரிவித்தார்.

ஞானசார தேரர் தலைமையிலான இச் செயலணி கடந்த வாரம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது. முன்னதாக வட மாகாணத்துக்கு சென்று இருந்தது.

நாம் கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் குறித்து நந்தன விஜேசிங்கவிடம் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

வட மாகாணத்துக்கான விஜயம் குறித்த அறிக்கையை ஏற்கனவே ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து விட்டோம். கிழக்குக்கான விஜயம் குறித்த அறிக்கையை இம்மாத இறுதியில் சமர்ப்பிக்கின்றோம்.

கிழக்குக்கான விஜயம் மிகுந்த திருப்தியாகவும் ரொம்ப மகிழ்ச்சியாகவும் அமைந்தது. இதில் எம்மை மகிழ்ச்சியின் உச்சத்துக்கு கொண்டு சென்ற விடயம் என்னவென்றால், இலங்கையின் பாரம்பரிய முஸ்லிம்களை நாம் சந்தித்தோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடியிலும் அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக்குடியிலும் சந்தித்தோம். அவர்களுடைய பள்ளிவாசல்களில் வைத்து ஞானசார தேரருக்கும் செயலணி உறுப்பினர்களுக்கும் மகத்தான வரவேற்புகள் தரப்பட்டன.

அவர்கள் இந்நாட்டில் பாரம்பரியம் பாரம்பரியமாக வாழ்ந்து வருகிற முஸ்லிம்கள் ஆவர். அவர்கள் இந்நாட்டின் பாரம்பரிய கலாசாரங்களைபின்பற்றுபவர்கள். இந்நாட்டின் ஏனைய இன மக்களுடன் அன்பாக வாழ்பவர்கள்.

அத்துடன் நாட்டு பற்றாளர்கள். தீவிரவாதத்துடன் சம்பந்தம் இல்லாதவர்கள். அராபிய கலாசாரத்தை பின்பற்றுபவர்களாக இல்லாமல், இலங்கையின் ஏனைய இன மக்களை போலவே வாழ்கின்றனர்.

ஆனால், தீவிரவாத முஸ்லிம் குழுவினரால் பேராபத்துகளை தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர். அவர்களை பாதுகாக்க வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உள்ளது. அவர்களை பாதுகாப்பதற்கென புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான சிபாரிசை செயலணி மேற்கொள்ளும்.

## பட்ஜெட் 2/3 பெரும்...

எம்.பிக்களும் எதிரணியை சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்கள் வாக்களித்தனர்.

இதன் போது முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிஸ் பாராளுமன்ற எம்.பிக்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.முஷர்ரப், நஸீர் அஹமட், இஷாக் ரஹ்மான், ஏ.எஸ். எம்.ரஹீம், எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் ஆளும் தரப்புடன் இணைந்து வரவுசெலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி டயனா கமகே, தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பி அரவிந்த குமார் ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர்.

வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக எதிரணியில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பிக்கள் வாக்களித்தனர். இலத்திரனியல் வாக்களிப்பு முறையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் எதிராக வாக்களித்திருந்தனர். அத்தோடு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது கட்சி உறுப்பினரும் எதிராக வாக்களித்தனர்.

இதே வேளை 03 எம்.பிக்கள் வாக்களிப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. டபிள்யூ. டி ஜே. செனவிரத்ன, விஜேதாச ராஜபக்ஷ, குமாரவெல்கம ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு பிரசன்னமாகியிருக்கவில்லை.

பாராளுமன்றம் ஜனவரி 11ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு (வரவுசெலவுத்திட்ட உரை) நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது. நவம்பர் 13 சனிக்கிழமை முதல் நவம்பர் 22ஆம் திகதி வரை 07 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

நவம்பர் 22ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நவம்பர் 23ஆம் திகதி குழுநிலை விவாதம் ஆரம்பமானதுடன், சனிக்கிழமைகள் உள்ளடங்கலாக இன்று வரை (டிசம்பர் 10) 16 நாட்கள் குழுநிலை விவாதம் இடம்பெற்றது

## காணாமல் ஆக்கப்பட்...

ஏற்பாட்டில் காலை 10.30 மணிக்கு ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா. அரியேந்திரன், ஒய்வு பெற்ற மட்டு அரசாங்க அதிபர் மா. உதயகுமார், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் காணாமல் போன உறவுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, சர்வதேசமே இலங்கை அரசுக்கு துணை பேகாதே, அச்சுறுத்தாதே அச்சுறுத்தாதே. புலனாய்வாளர்களால் அச்சுறுத்தாதே, இலங்கை அரசே ஒப்படைக்கப்பட்டு சரணடைந்த உறவுகள் எங்கே?, ஐ.நாவே ஒஎம்பியை திணிக்க இலங்கை அரசுக்கு துணை போகாதே, இலங்கை அரசே எமது உறவுகளுக்கும் மதிப்பளி போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி சுமார் ஒருமணித்தியாலம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டகாரர்கள் பின் அங்கிருந்து விலகி சென்றனர்.

இதேவேளை, கல்முனையிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கம் ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (10.12.2021) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகத்திற்கு முன்னால் இடம் பெற்றது.

டிசம்பர் மாதம் 10ம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாகும். இந்த தினத்தில் மனித உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், இலங்கை நாட்டில் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தெரிவித்தனர்.

அம்பாரை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி உட்பட பலர் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகத்தில் அதன் இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் மகஜர் ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கையளித்தனர்.

## அம்பாறை மாவட்டத்தில்...

சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு .சுகுணன் குறிப்பிட்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வெள்ளிக்கிழமை(10) மாலை விசேட செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு கூறினார்.

மேலும் தனது கருத்தில், ஐக்கிய நாடுகள் சபையினால் டிசம்பர் 1 திகதி உலக எயிட்ஸ் தினமாக அனுஸ்டிக்கப்படுகின்றது. 1981 ஆண்டு முதலாவது எயிட்ஸ் நோயாளி இனங்காணப்பட்டதை தொடர்ந்து இன்று வரை 36 மில்லியன் மக்கள் இந்த எயிட்ஸ் நோயினால் இறந்துள்ளனர். 37 மில்லியன் மக்கள் இன்று வரை எயிட்ஸ் நோயுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையை பொறுத்தமட்டில் 2600 பேர் சிகிச்சையை எயிட்ஸ் நோய்க்காக பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இன்றும் இலங்கையில் 1000 எயிட்ஸ் நோயாளிகள் எம்மிடையே மறைந்து வாழ்கின்றனர். தற்போது அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோய் ஆனது ஒருவரின் நிர்பீடண சக்தியை இல்லாதொழிக்கின்றது. எயிட்ஸ் நோயானது 3 முறைகளில் பிரதானமாக பரவல் அடைகின்றது. அதாவது பாதுகாப்பற்ற பாலியல் செயற்பாடு தாய் தந்தையினுடாக பிள்ளைக்கு கடத்தப்படுதல் பாதுகாப்பற்ற ஊசிகள் மற்றும் இரத்த மாதிரிகளின் ஊடாகவும் பரவுகின்றன. இலங்கையை பொறுத்த மட்டில் பாதுகாப்பற்ற முறையில் ஆண் ஆணுடன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் 40 வீதத்திற்கு அதிகமாக எயிட்ஸ் அதிகரித்து செல்கின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும் என்றார்.

## ஹரீஸுடன் ஒப்பந்தம்...

கல்முனை பாதீட்டு வாக்கெடுப்பு தொடர்பில் தன் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்வு என்பது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை. இதனை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முஸ்லிம்களுக்கும் பாதிப்பு இல்லாமல் தீர்க்க கொள்கை அளவில் எங்களது கட்சி தலைமையுடன் இணங்கியுள்ளனர். தனி மனிதனுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. கட்சியுடனேயே நாம் பேசி வருகின்றோம்.

கல்முனை மாநகர சபையில் பெரும்பான்மை உறுப்பினர்கள் முஸ்லிம்கள். நாங்கள் பலவாறு ஆலோசித்து ஒப்பீட்டளவில் எமது தீர்மானம் அமைகிறது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்று இருக்கும் அதாவுல்லாவின் நிகழ்ச்சி நிரலில் இயங்கும் அணியினர் ஆட்சி அமைக்க உதவுவது சரியா? முஸ்லிம்களுக்கு பாதிபில்லாமல் வடக்கு பிரதேச செயலகத்துக்கு தீர்வுகாண இணங்கும் தரப்பு ஆட்சி அமைக்க உதுவுவது சரியா? என்பதை மக்கள் ஆழமாக சிந்தித்தால் விளங்கிக் கொள்வார்கள்.

எடுத்த எடுப்பில் கருத்து கூறுவதும், விமர்சிக்க முனைவதும் பக்குவமான செயலல்ல.

எமது மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபை உட்பட வடக்கு,கிழக்கில் மேலும் சில உள்ளூராட்சி சபைகள் முஸ்லிம் காங்கிரசுடன் இணக்கப்பாட்டுடன் ஆட்சி அமைத்துள்ளோம். அவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு,பல்வேறு காரணங்களுக்காக பாதீட்டை எதிர்க்காது, நான் உட்பட எங்கள் கட்சியில் ஐவர் நடுநிலை வகித்தோம் என்றார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## கொடூரம்; மிலேச்சத்தனம்...

மதத்தின் பெயரால் இத்தகையோர் நடத்தும் கொடூர செயல்கள், மதத்தையே இழிவுபடுத்துகிறது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மொழி தெரியாமல் நடந்த தவறுக்கு மன்னிப்பு கேட்ட ஒருவரை, மிலேச்சதனத்துடன் பதில் கொடுப்பது என்பது, நாகரீக சமூகத்தின் வெளிப்பாடாக தெரியவில்லை.

ஆகவே,சமூகங்களிடையே குரோதங்களை வளர்ப்பதற்கு பதில், மனிதமும் மனிதநேயமும் விதைக்கப்பட வேண்டும்.

## எல்லா முஸ்லிம்...

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக பொருளாளரும், கிழக்குதேசம் அமைப்பின் ஸ்தாபகருமான வஃபா பாருக் அடங்கலாக அரசியல் சமூக பொது நல ஊடக செயற்பாட்டாளர்கள் பங்கேற்றதுடன் செயலணி முன்னிலையில் கருத்துகளை பதிவேற்றினார்கள்.

நாம் இது தொடர்பாக வஃபா பாருக்கை நேற்று வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்டு கேட்டபோது இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஞானசார தேரர் தேசியவாத சிந்தனை உடையவர். அவருக்கென தனியான பாதை ஒன்றை வகுத்து செயற்பட்டு கொண்டு இருக்கின்றார்.

ஞானசார தேரருக்கு முஸ்லிம்கள் குறித்து அபிப்பிராயம் உள்ளது. எல்லா முஸ்லிம்களும் தீவிரவாத போக்கு உள்ளவர்கள் என்று நம்புகின்றார். அவரின் நம்பிக்கை தவறானது.

நாம் அவரை வரவேற்றோம். அவருக்கு அன்பளிப்புகள் வழங்கினோம். இதன் மூலமாக முஸ்லிம்கள் குறித்த அவரின் எண்ணம் மாறும் என்பது எமது நம்பிக்கை.

ஜனாதிபதிக்கு செயலணி பெப்ரவரி மாதம் அதன் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளது. அதில் இம்மாற்றங்கள் எதிரொலிக்கும் என்பது எமது விசுவாசம். முக்கியமாக முஸ்லிம்கள் எல்லோரும் தீவிரவாதிகள் அல்லர் என்று ஞானசார தேரர் தலைமையிலான செயலணி அறிக்கையிட வேண்டும். அதுவே எமது பெரு விருப்பம் ஆகும்.

## தடுப்பூசி பெறாதவர்களுக்...

கடந்த சில தினங்களாக பதிவாகிவரும் கொவிட் தொற்றாளர்களில் பெரும்பாலானவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் என்பதுடன், அவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என்றும் சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கு உடனடியாக தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, கொவிட் பரவலைத் தடுக்க, தடுப்பூசி போடப்படாதவர்களை பொது இடங்களுக்குச் செல்வதைத் தடுக்க தற்போது சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பொது இடங்களுக்கு செல்லும் போது தடுப்பூசி அட்டையை வைத்திருப்பது கட்டாயமாக்க கொவிட் குழு இன்று தீர்மானித்துள்ளது.

16 முதல் 19 வயது வரை உள்ள பிள்ளைகளுக்கும் இரண்டாவது டோஸும், 12 முதல் 15 வயது வரை சிறுவர்களுக்கு முதல் டோஸும் அனுமதிக்கப்படுகிறது.

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதோடு, விமான நிறுவனங்கள் விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. அதற்கமைய, தற்போதுள்ள ஊக்குவிப்பு நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சுற்றுலாத்துறைக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை மேலும் தளர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்முனை NET e paper kalmunainet.com

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு,
கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com



ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.

# கொடூரம்; மிலேச்சத்தனம்

“யார் மதத்தை பயன்படுத்தி அநீதி இழைத்தாலும், அவர்களை விட்டு விடாதீர்கள். குற்றச்சாட்டுகளை முன் வைத்து, தானே நீதிபதியானதில் நியாயமில்லை” என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஸியால்கொட் பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையில், முகாமையாளராக பணியாற்றிய “பிரியந்த குமார தியேவதன” என்ற இலங்கை பிரஜை மிகவும் மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டார்.

கடந்த மூன்றாம் திகதி நடந்த இந்த கொடூரம், முழு உலகையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

உயிரோடு ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டு, குற்றுயிரோடு நடு வீதியில் பகிரங்கமாக எரிக்கப்படு வதை, கூடிநின்ற கூட்டம் வேடிக்கை பார்த்து ‘செல்பி’ எடுத்துக் கொண்டிருந்த சம்பவம் உலகை ஒரு கணம் மௌனிக்கச் செய்தது.

காரணம் எதுவாக இருந்தாலும், கேவலம் கெட்ட ஒரு சிலரால் நடத்தப்பட்டிருக்கும் இந்த மிலேச்சத்தனமான செயல், மானிடரை வெட்கித் தலைகுனிய வைத் திருக்கிறது. அரக்கத்தனமான இந்த கொடூரத்தை எந்த ஒரு மதமும் ஆதரிக்கவில்லை.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், இந்த மிலேச்சத் னத்தை, பாகிஸ்தானுக்கும் மனித குலத்துக்கும் ஏற்பட்ட பேர் அவமானமாகவே அறிவித்திருக்கிறார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள், கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். பிரதான சந்தேக நபர் என நம்பப்படும், ‘பில்லி அல்லது இம்தியாஸ்’ என்பவரும் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் பஞ்சாப்பிலுள்ள சியால்கோட் நகரில், ஆடை தொழிற்சாலையில் நீண்டகாலம் பணியாற்றி வந்த பிரியந்த குமார மீது, ஒரு சில ஊழியர்கள் வெறுப்பு கொண்டிருந்தனர்.

தொழிற்சாலையின் ஒழுக்க விதிமுறைகளை பேணுவதில், பிரியங்க மிகவும் கண்டிப்புடன் செயல்பட்டதனால், சில ஊழியர்கள் ஆத்திரம் அடைந்திருந்தார்கள் என ஆரம்ப கட்ட விசாரணைகளை ஆதாரம் காட்டி பாகிஸ்தான் ஊட கங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

சம்பவ தினமும் பிரியந்த சுத்திகரிப்பு தொழிலாளிகளுடன் கண்டிப்பாக நடந்து கொண்டதோடு, வர்ணம் பூசுவதற்காக சுவர்களில் இருந்த ஸ்டிக்கர்களை அவரே அகற்றியுமுள்ளார். இதன்போது, அதிலிருந்த மதம் ஒன்றுடன் சம்பந்தமான ஸ்டிக்கர்களும் அகற்றப்பட்டுள்ளன. இதன்மூலம், ஆத்திர மடைந்த ஒரு சில ஊழியர்கள் முகாமையாளரை தாக்க முற்பட்டுள்ளனர்.

இதன் பின்பு நடந்த பேச்சுவார்த்தைகளின் போது, உருது மொழி தெரியாததால் தான் இந்த தவறை செய்ததாக அவர், தொழிலாளர்களிடம் மன்னிப்புக் கோரியிருக்கிறார். என்றாலும் அடிப்படைவாத கும்பல் அவரை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத பிரியந்த உயிர்ப் பிச்சை கேட்டு ஓடியதோடு, தொழிற்சாலை கூரையின் மீது ஒளிந்து கொண்டார். அங்கிருந்து வீதிக்கு இழுத்து வரப்பட் டவர் மீது, அடிப்படைவாத கும்பல், நடத்திய கொடூரமான தாக்குதலில் பிரியந்த உயிரிழந்தார். என்றாலும், அந்தக் கும்பல் நடுவீதியில் வைத்து அவரை, குற்றுயிரோடு, தீ வைத்து எரித்தது.

மனித ஜீவன்களால், ஏற்கவே முடியாத மிலேச்சத்தனமான, இந்தக் கொடூரத்தை யாருமே ஏற்கப் போவதில்லை. பாகிஸ்தான் பிரதமரின் தலைமையில், இஸ்லாமாபாத்தில் உள்ள அவரது அலுவலகத்தில், பிரியந்தவுக்கு அனுதாபக் கூட்டம் நடத்தப்பட்டு உள்ளது.

படுகொலை செய்யப்பட்ட முகாமையாளருக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை நஷ்ட ஈடாக வழங் குவதற்கும், மாதாந்தம் அவருடைய சம்பளத்தை குடும் பத்தாருக்கு தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அறிவித்திருக்கிறார்.

எத்தனை கோடி என்றாலும், பிரியந்தவின் பிரிவை கோடிகள் ஈடு செய்யாது. இதுபோன்ற, கொடூரம் உலகில் எந்த ஒரு நாட்டிலும் நடந்துவிடக்கூடாது.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...

# பதிவு செய்வதில் தமிழ் கூட்டமைப்புக்கு என்ன பிரச்சனை...?

■ கே. குணராசா



**‘தமிழ் முற்போக்கு கூட்டணி’** அரசியல் கட்சி யாக தேர்தல்கள் ஆணையாளரால் அங்கீகாரம் பெற்றுள்ளது. இது மூன்று கட்சிகளின் கூட்டணி. தேர்தல் காலத்தில் கூட்டணி அமைத்து களம் கண்ட கூட்டணி.

மலையக மக்கள் நலனில் ஒன்றுபட்டு, ஐக்கியமாக செயல்பட்டதனால் இந்த அங்கீகாரம் கிடைத் திருக்கிறது.

ஜனநாயக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளின் கூட்டே, இந்த தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகும்.

2015ஆம் ஆண்டு முதல், மனோ கணேசன் தலை மையில் செயல்பட்டு வரும் இந்த கூட்டணிக்கு ஆறாண்டு பயணம் என்றாலும், ஓர் இலகு வெற்றி யுடன் கூடிய ஓர் இமாலய சாதனை என இதனை சொல்லலாம்.

இந்த மூன்று கட்சிகளின் தலைவர்களுக்கிடையில், இந்த விட்டுக் கொடுப்பும், தாங்கள் சார்ந்த மக்கள் நலனில் இருந்த ஏகோபித்த நிலைப்பாடும் தான், இந்த வெற்றிக்கு பின்னால் உள்ள இரகசியமாகும்.

கூட்டணியாக சேர்ந்து செயல்படும் போது, உள் முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பானது. அவை களை தூசாக ஊதிவிட்டு, இலக்கோடு பயணித்த னால் சாதித்திருக்கிறார்கள் என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் தடமாக பதிந்திருக்கிறது.

வடக்கு-கிழக்கு அரசியலை மையமாக கொண்டு இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏன் இது இன்னும் சாத்தியமாகவில்லை? மனோ கணேசன் தலைமையில் அந்த தமிழ் முற்போக்கு முன்னணிக்கு சாதிக்க முடியுமாக இருந்தால், சுமார் முப்பது வருடங்கள் சம்பந்தன் தலைமையில் களத் தில் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏன் ஒரு கட்சியாக பதிவு செய்வது வலுப்படுத்த







முடியாமல் போயுள்ளது என்பதுதான் இன்றைய கேள்வியாக இருக்கின்றது.

தமிழ்த் தேசிய புலத்தில் இன்று முதுபெரும் தலை வராக இருப்பவர் சம்பந் தன் ஐயா. தமிழர் நலனுக் காகவும் தமிழருக்கான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக வும், அயராது உழைத்து வருபவர். மாற்றுக் கருத் தில்லை.

அவரது தலைமைக்கு பின்னால், தமிழ் மக்கள் சக்தியும் திரண்டு நிற்கிறது. என்றாலும், ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கும், இந்த மாபெரும் கூட் டமைப்பை தனிப்பெரும் கட்சியாக பதிவு செய்ய முடியாமல்இருப்பது, அவரது தமிழ்தேசியசிந்தனை யிலும் தலைமையிலும் பெரும் பலவீனத்தை காட்டி நிற்கிறது.

கூட்டமைப்பில் உள்ள கட்சிகளிடையே விட்டுக் கொடுப்பு இல்லாததுதான் பதிவு செய்யப்படாமல் இருப்பதற்கு காரணமாக காட்டப்பட்டாலும், சம்பந்த னின் முழுமையான தலைமையில் உள்ள தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் தான் இதற்கு முட்டுக் கட்டையாக இருக்கிறது என்பதுதான்,யதார்த்தமான உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 1990 ஆம் ஆண்டு

> “தமிழரசுக் கட்சியின் செயல்பாடு இலக்கை நோக்கிய பயணத்துக்கு முட்டுக்கட்டை!”

காலப் பகுதியில் உருவாக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்புலத்து ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் கூட்டணியில், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எஃப், தமிழரசுக் கட்சி ஆகியன அங்கம் வகித்தன.

பின்னர்தர்மலிங்கம்சித்தார்த்தன்தலைமையிலான புளட் கட்சியும் இணைந்து கொண்டது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி யின் செயல்பாடுகளால், அதிர்ச்சி அடைந்த தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனித்து செயல்பட தொடங்கியது. அதேபோல, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமை யிலான ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதில் ஏற்பட்ட, உள்ளக முரண்பாடுகளால் வெளியேறி, தனித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்...

# சலுகை அரசியலும் பதவி மோக அரசியலும் நிரந்தரத் தீர்வைத் தராது!

## மட்டு மாவட்ட முன்னாள் எம்பி ஜி. ஸ்ரீநேசன்



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் கல்முனை நெற்றுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டி ;**

**கே: *இன்றைய பூகோள அரசியலில் இலங்கையின் நிலையைப் பயன்படுத்தி தமிழர்கள் தங்களுக்கான அரசியல் தீர்வினை பெறக் கூடிய சாதகமான முயற்சிகள் எவ்வாறு அமைய வேண்டும்?***

**ப:** இன்றைய நிலையில் இலங்கை அரசியல், பொருளாதார, சமூக, பூகோள ரீதியாக சங்கடமானதும், நெருக்கடியானதுமான நிலையில் உள்ளது. அரசியல் ரீதியாகப் பார்க்கின்றபோது சீனாவுடனான நெருக்கமான உறவு, சீனாவின் அதிகரித்த இலங்கைப் பிரசன்னம், சீனாவின் கடன் பொறி என்பவற்றால் இந்தியா, யப்பான், அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற குவாட் அமைப்புக்குரிய ஜனநாயக நாடுகள் இலங்கை மீது அதிருப்தியடைந்துள்ளன.

அதேபோல், ஐ.நா.சபையின் மனித உரிமைப் பேரவையால் கொணர்ந்த இலங்கை மீதான 46/1 தீர்மானத்தினை இலங்கை புறக்கணித்து விட்டது. இதனால் ஐ.நா.சபையும் இலங்கை மீது அதிருப்தியடைந்துள்ளது.அமெரிக்கா ஒன்றுகூடல் ஒன்றுக்காக 109 ஜனநாயக நாடுகளை அழைத்துள்ளது. அதில் இலங்கை நாடு தவிர்க்கப்பட்டுள்ளது.

நாட்டின் டொலர் கையிருப்பு 0.4 பில்லியன் டொலர்களாக வற்றியுள்ளது. இந்தியாவிடம் 1.5 பில்லியன் டொலர்களை எதிர்பார்த்துச் சென்ற நிதியமைச்சர் பசில் வெறுங்கையுடன் திரும்பியதாக அறிய முடிகிறது. ஒவ்வொரு குடிமகனும் 9.5 இலட்சம் ரூபாய் கடனாளியாக்கப்பட்டுள்ளான். அடுத்தாண்டில் பல மில்லியன் டொலர் கடன்களை அடைக்க வேண்டிய நிலையில் இலங்கையரசு உள்ளது.

நாட்டின் சொத்துகள் பிறநாடுகளுக்கு விற்கப்படுகின்றன.பல்லின சமூகங்களுள்ள நாடு என்ற நிலையில் இருந்து விடுபட்டு சிங்கள பௌத்த நாடு என்ற வகையில் நாடு வேகமாக நகர்கிறது. காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்குத்தீர்வு இல்லை, தமிழர்களுக்கான பிரச்சினைக்குத் தீர்வு இல்லை. தமிழ் பேசும் சமூகங்கள் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படியான சூழலில் இலங்கை தன்னைத்தானே தனிமைப்படுத்தியுள்ள நிலைமை உருவாகியுள்ளது. இலங்கையின் உள்ளகப்பொறிமுறைகள் செயலிழந்துள்ளன.

சீனாவின் பிடியில் இருந்து இலங்கையை மீட்க வேண்டும் என்ற நிலையில் குவாட்டமைப்பு நாடுகள் வியூகம் அமைத்து வருகின்றன. இந்த நிலையில் சர்வதேச ரீதியாக இலங்கையை இறுக்குவதற்கு இறுதி யுத்த மனிதப் பேரவலம் என்ற விடயத்தினை மேற்குலக ஜனநாயக நாடுகள், ஆசிய ஜனநாயக நாடுகள் கையில் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை சர்வதேச நாடுகளுக்கு வேண்டியதாக மாறியுள்ளது. இந்த நிலையில் தமிழ் தேசிய அரசியல் சக்திகள் ஒன்றாக ஐக்கியப்பட்டு எமக்கான அரசியல் தீர்வினை உருப்படியாக முன்வைக்க வேண்டிய காலம் கனிந்து விட்டது.

எனவே, முறையான அதிகாரப் பகிர்வுடன் கூடிய சுயநிருணயத்தை வலியுறுத்தத்தக்க சமஷ்டியாட்சி முறையைத் தமிழ்பேசும் சமூகங்கள் முன்வைக்க வேண்டும். சலுகை அரசியல், பதவி மோக அரசியல் தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தர தீர்வைத்தரவேதராது.

முஸ்லிம் அரசியல் கட்சிகள் மன்றாடியாவது அமைச்சர் பதவிகளைப் பெற்றால் போதும் என்று முயற்சிக்கக் கூடாது. சமத்துவ உரிமைகளைப் பெறுவதற்கு தமிழர்களோடு கைகோர்க்க வேண்டும். பிரித்தாளும் தந்திரமுடைய பேரினவாத அதிகார வர்க்கத்தின் எடுபிடிகளாக ஆமாம் சாமிகளாக தமிழ் பேசும் சமூகம் மாறக்கூடாது. வடக்கு–கிழக்கில் தமிழ் பேசும் சமூகங்கள் சுயமரியாதையுடன் சமத்துவமாக வாழ்வதற்கு இன்றைய பூகோள அரசியலைப் பயன்படுத்த வேண்டும். சிறு சலுகைகள் அமைச்சர் பதவிக்காக ஜனநாயகத்தை அழிக்கின்ற செயற்பாடுகளுக்குத் தலையாட்டிகள் கைதூக்கிகளாக மாறக்கூடாது.

தலைவர் ஒரு புறம் அவர்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுபுறம் என்ற வகையில் முஸ்லிம் கட்சிகள் செயற்படுவதன்பது, பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் இவர்கள் பலியாகியுள்ளதையே காட்டுகிறது. கடந்த காலத்திலும் அதாவுல்லா, அமீர் அலி, றிஷாத் போன்ற முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் காங்கிரசிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டனர், இன்றும் கூட தலைவர்களில் இருந்து முஸ்லிம் எம். பி களை அமைச்சர் பதவிகளால் பிரிக்கப்படக்கூடிய அபாயநிலை ஏற்பட்டது போல்படுகிறது.

இலங்கையரசிடம் உள்நாடுப் பொறிமுறை அற்ற நிலையில், வடக்கு – கிழக்கிலுள்ள தமிழ் தேசியக் கட்சிகள் ஐக்கியப்பட்டு இனப் பிரச்சினைக்கான தீர்வினை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் ஒத்துழைத்துப் பெற வேண்டும். அந்த வேளையில் முஸ்லிம் கட்சிகளும் இந்த விடயத்தில் கரிசனை காட்ட வேண்டும்.

5வருட கால அமைச்சர் பதவிக்கான அரசியல், முஸ்லிம் மக்களுக்கான தீர்வாக அமையாது. அரசாங்கத்தை மன்றாடியாவது மக்களின் தேவைகளை நிறைவேற்றுவோம் என்ற பா. உ. ஹரிஸ் அவர்களின் கருத்து அடிமைத்துவமான இரண்டாந்தர அரசியலாகவே அமையும். மக்களாட்சி நாட்டில் இலங்கை வாழ்மக்கள் அனைவரும் சமத்துவம் மிக்கவர்கள்,அதனை அடைய வேண்டியது மக்கள் தலைவர்களின் தார்மீகக் கடமையாகும்.

**சமத்துவ உரிமைகளைப் பெற முஸ்லிம்கள் கைகோர்க்க வேண்டும்**

இந்து சமுத்திரத்தில் சீனாவின் ஆதிக்கத் தினைக்கட்டுப்படுத்தல் என்ற பொறி முறையானது இந்தியாவின் பாதுகாப்பு ஈழத்தமிழர், முஸ்லிம்களின் பாதுகாப்பு என்பதும் ஒரு புள்ளியில் வந்து சேர்கின்றன என்பதை தமிழ் பேசும் சமூகங்கள் உணர்ந்தாக வேண்டும்.

மன்றாடிப் பெறுபவை உரிமைகளல்ல; தற்காலிக சலுகைகளேயாகும். அண்மையில் பா.உ சுமந்திரன் தலைமையில் தமிழ் சட்ட நிபுணர் குழுவினர் அமெரிக்கா சென்றமை ஆரம்பமாக அமைகிறது. தற்போது இந்தியா தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். இதனைச் சரியாகப் பயன்படுத்தியாக வேண்டும்.

**கே: *கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தினைத் தரமுயர்த்துகின்ற விடயத்தில் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் உட்பட அவர்கள் சார்பான சில இனவாத அமைப்புகள் தடையாக இருப்பதற்கு மாறாக, தமிழர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?***

**ப:** கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் என்பது ஓர் அரசியல் அலகல்ல. ஒரு நிருவாக அலகு. அதாவது, மக்களுக்கான நிருவாக ரீதியான நடவடிக்கைகள், அமுலாக்கல்களை மேற்கொள்ளுகின்ற அலகாகும். குறிப்பாக அங்கு வாழும் தமிழ் மக்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்த உப பிரதேச செயலத்தை தரம் உயர்த்தித் தரவேண்டும் என்று ஜனநாயக அடிப்படையில் பாராளுமன்ற மட்டத்திலும், அமைச்சர், பிரதமர் மட்டத்திலும் பல தடவைகள் பேசி இணக்கம் காணப்பட்ட விடயமாகும்.

கல்முனைத் தமிழ் மக்கள் இதனை நீண்ட காலமாக எதிர்பார்த்து நிற்கிறார்கள். அகிம்சைப் போராட்டங்களையும் நடாத்தியுள்ளனர். இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் அவர்கள் இந்த விடயத்தில் தமிழர்களின் நிருவாக அபிலாசையினை நிராகரிக்கும் விதத்தில், தனது அரசியல் தேவைக்காக தொடர்ந்தும் தடையாக இருக்கக் கூடாது.

இதனைத் தடுப்பதற்காக ஜனநாயக விரோதமான 20 ஆவது திருத்தம், நாட்டின் இறைமையைப் பாதிக்கும் போட் சிற்றி ஆணைக்குழுச் சட்ட மூலம் எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கைதூக்கி வருகின்றார் ஹரிஸ் அவர்கள். இதன் மூலமாக பேரின அடிப்படைவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்தாவது கல்முனைத் தமிழர்களின் நியாயமான நிருவாக அலகு தொடர்பான அபிலாசையை முடக்க நினைக்கிறார்.

> **“ஹரீஸ் தமிழர்களுடன் நிரந்தர பகையை ஏற்படுத்த முனைகிறார்”**

உண்மையில், தமிழ் பேசுகின்ற சமூகங்கள் என்ற வகையில் தமிழர்களின் அபிலாசையைப் புரிந்து கொள்ளாமல் எப்படியாவது அதனைத் தடுத்து விடுவது என்ற அடிப்படையில், ஹரிஸ் போன்றவர்களது செயற்பாடுகள் தமிழர்களோடு நிரந்தரமான பகைகளை வளர்ப்பது போல் அமைகின்றது.

இந்த நிலையில் கல்முனைத் தமிழர்கள் கல்முனையிலுள்ள முஸ்லிங்களின் வியாபாரங்களுக்கு ஒத்துழைக்காமல் தமது பொருட் கொள்வனவுகளைத் தவிர்க்கக் கூடிய முடிவுகளை மேற்கொண்டால்,அவர்களது வர்த்தகம் பாரியளவில் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இப்படியான சங்கடமான முடிவை எடுப்பதற்கு பா.உ காரணமாக இருந்து விடக்கூடாது.

நுகர்வாளர்களாக இருந்து கொண்டு கல்முனை முஸ்லிம் வர்த்தகத்திற்குப் பாரிய பங்களிப்பினைச் செய்பவர்கள் தமிழர்களாவர். அவர்கள் அந்த நுகர்வுச் செயற்பாடுகளை கல்முனை தவிர்ந்த பிற இடங்களில் அல்லது தமிழ் வரித்தகர்களிடம் கொள்வனவு செய்யக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது. அதாவது கல்முனையிலுள்ள தமிழ் – முஸ்லிம் உறவுகளைக் கெடுத்து விடக்கூடாது.

இந்த நிலையில் ஆளும் கட்சியிலுள்ள அமைச்சர், பா.ம. உறுப்பினர்களான வியாழேத்திரன், சந்திரகாந்தன் தேர்தலில் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியான கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை 3 நாட்களுக்குள் முழுமையாக்குதல், கருணாவின் 24 மணித்தியாலத்துள் அதனை முழுமையாக்குதல் என்ற கருத்தினை அவர்கள் மறந்து விடக்கூடாது.

ஆளும் கட்சியில் இருந்து அன்று இதனைத் தடுத்த ஹரிஸ் இன்று எதிர்க்கட்சியில் இருந்து ஆளும் கட்சியை மன்றாடியாவது தடுத்து வருகிறார் என்பது புலனாகிறது. இந்த விடயத்தில் ஆளுங்கட்சியில் ஒட்டியுள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனியும் கையாலாகாதவர்களாக இருக்க முடியாது. இது கல்முனைத் தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

மட்டக்களப்பில் நிலத் தொடர்பற்ற முஸ்லிம் மத்திய கல்வி வலயத்தினை முன்னாள் அமைச்சர் அமீர் அலி அவர்கள் மகிந்த அரசாங்கத்தில் இருந்து கொண்டு முஸ்லிம்களுக்காக மட்டும் அமைத்தார்.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்...

**நேர்காணல்: பு. கேதீஸ்**

அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர், பேராசிரியர் காதர் மொஹிதீனின், இலங்கை விஜயத்தில் முஸ்லிம் சமூகம் எவற்றை எதிர்பார்க்கிறது?

அரசியல், சிவில் மற்றும் ஆன்மீகத் தலைமைகள் இவரைச் சந்திப்பதில் காட்டுகின்ற ஆர்வம் தொடர்பில் இந்தச் சிவில் சமூகம் ஆர்வத்துடன் அவதானிக்கிறதா?

இவ்வளவு முக்கியம் வாய்ந்த ஒரு தலைவரிடம் இலங்கை முஸ்லிம்களின் அங்கலாய்ப்புக்கள் தொடர்பில் எத்தி வைக்கப்பட்டிருக்கிறதா?



## பேராசிரியர் காதர் முகைதீனை சந்திப்பதில் ஏட்டிக்குப் போட்டி

# முஸ்லிம் தலைமைகளின் உசுப்பேற்றும் அரசியல்!

நிப்ராஸ்

இது பற்றி அவதானம் செலுத்த வேண்டிய ஒரு யுகத்துக்கு முஸ்லிம் சமூகம் வரவேண்டி உள்ளது. காதர் மொஹிதீனை ஏட்டிக்குப் போட்டியாகச் சந்தித்து புகைப்படங்களை வெளியிடுவதில் காட்டப்படும் அக்கறைகள் இருக்கிறதே, இது வெறும் உசுப்பேற்றல் அரசியல்தான். இங்கு எதைப் பேசினார்கள் என்பது குறித்த அளவீடுகள்தான் சிவில் சமூகத்துக்கு தேவையான விடயம்.

ஒன்றித்து, ஒருமித்து, சந்தித்து இலங்கை முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு நடந்துள்ள, இனிமேல் நடக்கப் போகின்ற நன்மை, தீமைகளை இந்த தலைமைகள் எடுத்துச் சொல்லியிருந்தால், முஸ்லிம் சிவில் சமூகம் ஆறுதலடைந்திருக்கும்.

ஏன், முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் ஒருமித்துச் சந்திக்கவில்லை. இந்தக் கேள்வி, முஸ்லிம் அரசியலின் 'சீரியஸைக்' குறைத்து மதிப்பிடலாம்.

ஒருவேளை, இவரால் எதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் சிலர் இவரது வருகையை கண்டுகொள்ளாதும் விடக்கூடும். ஆனால், ஒன்று மட்டும் உண்மை, இந்திய அரசுக்கு அல்லது தமிழகத்துக்கு இவை இரண்டுமில்லாவிடினும், சிறுபான்மை அரசியலை எப்படி வழிநடத்துவதென்ற அறிவுரைக்காவது இவரது சந்திப்பு உதவும் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இருநூறு கோடி மக்கள் வாழும் இந்தியாவில், எல்லோரும் இந்தியர் என்ற உணர்வில் வாழப் பழகியுள்ள மற்றும் அந்த உணர்வுக்கேற்ப அரசியலை சிந்திப்பதுதான், அகில இந்திய முஸ்லிம்லீக். இதன், தலைவர் காதர் மொஹிதீனிடம் இலங்கை முஸ்லிம் தலைமைகளுக்கு, இங்குள்ள உரிமை அரசியலைப் புரியும்படி விபரிக்க முடிகிறதா? அவ்வாறு புரிய வைக்கப்பட்டாலும், இந்திய அரசியலில், இவற்றைச் சாதிக்கும் பலம் காதார் மொஹிதீனின் கட்சிக்கு உள்ளதா? இந்தப் பின்புலப் பார்வைகள், காதர் மொஹிதீனின் கட்சியால் இலங்கை முஸ்லிம்களுக்கு எதைச் செய்ய இயலும் அல்லது செய்யும் என்ற எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



எனினும், இந்திய மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளிடம் பரிந்துரைப்பதைத் தவிர வேறு எந்தத் தீர்வுகளையும் அகில இந்திய முஸ்லிம் லீக்கினால் செய்ய முடியாதிருக்கும். இதற்கான காரணங்கள் பலதில், பிரதானமானது இந்திய மத்திய அரசின் ஆளும் கட்சியான பாரதிய ஜனாதாவுக்குள்ள பலம் தான், இதுபோன்றுதான் தமிழக அரசிலும் திராவிட முன்னேற்ற கழகத்தின் பலமுள்ளது.

இது, பேரம் பேசும் அல்லது பணிய வைக்கும் அரசியல் சூழலை ஏற்படுத்தப்போவதில்லை. இதற்காகத்தான், பரிந்துரைப்பதைத் தவிர அகில இந்திய முஸ்லிம் லீக்கிற்கு வேறு வழியிருக்காது என்கிறோம்.

எனினும், இங்குள்ள கட்சிகளின் ஒற்றுமையின்மை, ஆளுமையின்மைகளை இந்திய முஸ்லிம்களிடம் சந்தைப்படுத்த காதர் மொஹிதீனின் கட்சிக்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்படும். இவர், இலங்கை வந்ததற்கு இரு தரப்பும் அடையும் ஆதாயமும் இது தான்.

ஏற்கனவே, முஸ்லிம் லீக்கிலுள்ள இந்திய முஸ்லிம்களுக்கு இலங்கை நிலவரத்தை எடுத்துக் காட்டி, தனது கட்சியை இன்னும் இறுக்கமாக்கி வைக்க இந்தப் பிரச்சாரம் காதர் மொஹிதீனுக்கு உதவும்தானே! இப்படித்தானே, ஒரு காலத்தில் முஸ்லிம்களின் பிளவுகளால் சமூகம் நாதியற்றுக் கிடந்தது சுட்டிக்காட்டப்பட்டு, கிழக்கில் முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுத்தப்பட்டனர்.

## ஒருமித்த கருத்தும் இல்லை; ஒன்றுபட்ட உழைப்பும் இல்லை!

உணர்ச்சிப் பேச்சுக்களால், இவ்வாறு முனைந்தமை அன்றைய சூழ்நிலைக்கு பொருந்தியதைப் போன்று இன்றைய நிலைமைகளுக்குப் பொருந்துமா? நிச்சயமாக இல்லை. எனவே, இந்தியாவைப் போன்று பல்லின, சமூக, சமயங்கள் வாழும் இலங்கையில், சிறுபான்மை அரசியலை முன்னெடுப்பது பற்றிய அனுபவங்களை இலங்கை முஸ்லிம் தலைமைகள் பகிர்ந்தேயாக வேண்டும்.

இதுவன்றி இன்னும் முஸ்லிம் சமூகத்தை இயலாமைக்குள்தான் கொண்டுவரும். இவை, தலைமைகளுக்கு தெரியாதவையும் இல்லை.அரசியலையும், வாக்குகளையும் சேகரிக்கவே இவை, என்பதை மக்கள் புரிவதுதான் அசியம். சமூகத்தின் உரிமைகள் பல, குரங்கின் கை பூமாலையாகுமளவுக்கு சிவில், அரசியல் தலைமைகளுக்கிடையில் இழுபறி நிலவியது இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இப்போதுள்ள பணி, மீண்டும் இந்நிலைமைகள் ஏற்படாதவாறு இயங்குவதுதான். இதற்காக, சமூகத்தின் சகல மட்ட தலைமைகளும் ஒன்றிப்பதையும்,



பயணிப்பதையும்தான் பொது மக்கள் வலியுறுத்த நேரிட்டுள்ளது.

எனவே, தொப்புள்கொடி உறவின் தலைமையின் வருகையை முஸ்லிம் சமூகம் சரியாகப் பயன்படுத்த முயல்வது அவசியம். இதைவிடுத்து, போராட்டம், விடுதலை, உரிமை முழக்கம் என்ற வார்த்தைகளைத் தூக்கிப் பிடித்து பின்னால் செல்வது, சிறுபான்மை முஸ்லிம்களை மேலும் தனிமைப்படுத்தவே செய்யும்.

இது, தலைமைகளுக்கு தெரியாததும் அல்ல. என்ன செய்வது? ஊரைக்கூட்ட குரவையிடுவ போல, தேர்தலில் வெல்ல உணர்ச்சியை ஊட்ட வேண்டியிருக்கிறதே! ஒருமித்த கருத்தும் இல்லாது, ஒன்றுபட்ட உழைப்புமில்லாது இலங்கை முஸ்லிம் தலைமைகளால் எதையும் செய்ய முடியாது என்பது தான் இன்று புரியப்பட்டுள்ள கருத்து.

காதர் மொஹிதீனும் இதைப் புரியாமலா இருப்பார். எனவே, பல்லின கலாசாரத்தில், சிறுபான்மையினரின் கலாசாரங்களை காப்பாற்ற உள்ள வழிகளைத்தான் தலைமைகள் ஆராய வேண்டும்.

உரிமை அரசியல் குரங்கின் கை பூமாலை யாவலதற்கு முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமை, ஆன்மீகத் தலைமைகளுக் கிடையில் நிலவிய இழுபறிகள்தான், காரணமெனவும் கூறியிருக்கிறது ஒரு தலைமை. முஸ்லிம் பொதுவெளியில் இந்தக் கருத்து பரவி விடப்பட்டுள்ளதால், சிவில் சமூகத்தினரின் தலைகளில்தான் இந்தப் பொறுப்புக்கள் வந்து குந்தப்போகின்றன.

எனவே, தனியலகு கோரும் அல்லது பிரதேச அடையாளத்தை வலியுறுத்தும் அல்லது போராட்ட மனநிலையை வளர்க்கத் தூண்டும் தலைமைகள், இனியாவது முஸ்லிம் புத்திஜீவிகளின் அல்லது அகில இந்திய முஸ்லிம் லீக்கின் வழிகாட்டலில்தான் எமது அபிலாஷைகளை அடையப்புறப்பட வேண்டும். இவ்வறான அணுகுமுறைகளை அகில இந்திய முஸ்லிம் லீக் புரிய வைக்குமா?

சலீம் மர்சூப் தலைமையில் நியமிக்கப்பட்ட 18 பேர் கொண்ட குழு சரிபாதியாகப் பிளந்ததில்தான், உரிமைக்கான அடைவுகள் தோல்வியில் முடிந்திருக்கின்றன. எனவே, இனியும் பிளவுகள் ஏற்படாது எல்லோரும் பயணிக்க வேண்டும்.

# சித்தன் போக்கு சிவன் போக்கு



சனாதன தர்மத்தை பொறுத்தவரையில் இறைவனுக்கு அடுத்த படிநிலையில் இருப்பவர்களாக சித்தர்கள் கருதப்படுகின்றனர்.

நமது மதத்தில் நவநாத சித்தர்கள் பதினெண் சித்தர்கள் என சித்தர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். நந்தீஸ்வரர், அகத்தியர் போன்றோர் நவநாத சித்தர்களுள் உள்ளடங்குகின்றனர். சித்தர்களின் ஜீவசமாதிகளும் இந்தியாவில் காணப்படுகின்றது.

அத்துடன் இலங்கையிலும் சித்தர்களின் ஜீவசமாதிகள் காணப்படுகின்றன. சித்தன் போக்கு சிவன் போக்கு என்பார்கள். சித்தத்தை சிவன் மீது முற்று முழுதாக திரும்பியவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். முக்காலத்தை உணர்ந்த ஞானிகளாக சித்தர்கள் கருதப்படுகின்றனர். அகத்தியர் பல யுகங்களாக வாழ்ந்த ஒரு சித்தர்.

சித்தர்களின் நிலைக்கு உயர்வு பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் மகான்களும் நம்மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இவர்கள் பொது வாழ்க்கையில் இருந்து விலகி வனாந்திரங்களிலும் தனிமையான இடங்களிலும் தமது தவ வாழ்வை உலக மக்களின் நன்மைக்காக மேற்கொள்கின்றனர்.

திருவண்ணாமலை சித்தர்மலை போன்ற இடங்களில் நாம் மகான்களையும் சித்தர்களையும் தரிசிக்க முடியும். இந்த நிலையில் கலிகால மக்களின் பாவங்களை போக்கவும் அவர்களது நல்வாழ்விற்காகவும் மகான்கள் பலர் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவின் – தமிழ்நாடு அருள்மிகு பாதாள காசி விசாலாட்சி அம்மை உடனுறை ஸ்ரீ பாதாள காசி விஸ்வநாதர் ஆலயம் மக்கள் குறைதீர்க்கும் ஒரு இடமாக இருக்கின்றது.

பொதுவாக நாம் சிவலிங்கங்களை பூமியின் மேற்பரப்பில் காண முடியும். எனினும், இந்த ஆலயத்தில் பாதாள அறைக்குள் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜைகள் நடைபெறுகின்றன.

பிரமாண்டமான ஆலயமாக இல்லாவிட்டாலும் சிவனின் அருள் நிறைந்த ஆலயமாக இது காணப்படுகின்றது. இந்த பாதாள அறைக்குள் நிஜ ஆனந்த காசி விஸ்வநாத சுவாமிகள் 48 நாட்கள் உலக நன்மைக்காக அன்ன ஆகாரமின்றி தியானத்தில் ஆழ்ந்திருந்தமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் ஒன்றாக அமைந்தது. இந்த ஆலயம் தமிழ்நாட்டின் நல்லிக்கவுண்டன் புதூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. சிவனிடமிருந்து கிடைத்த உத்தரவிற்கு அமைய ஆலயம் கட்டப்பட்டதாக சுவாமிகள் எமக்குத் தெரிவித்தார்.

பல அற்புதங்களை நிகழ்த்தும் இடமாகவும் இந்த ஆலயம் காணப்படுகின்றது. பொதுமக்கள் குறைகள் என தெரிவித்து இந்த ஆலயத்திற்கு வந்தால் சிவனிடம் நேரடி உத்தரவுகள் கேட்கப்பட்டு இங்கு தீர்வுகள் வழங்கப்படுகின்றன.







இந்த ஆலயத்தை நாம் ஈரோடு வழியாக சென்றால் அடையமுடியும். 70 வயதையும் தாண்டிய நிலையில் சுவாமிகள் தற்போதும் தனது உடலை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதுடன் யோகாசனத்தில் அநாயசமாக ஈடுபட்டு வருகிறார். புனித அமர்நாத் பனிலிங்கத்தை தரிசிக்க செல்லும் வழியில் பல அற்புதங்கள் தமக்கு இறைவன் காட்டியதாக நிஜ ஆனந்த காசி விஸ்வநாத சுவாமிகள் எம்மிடம் தெரிவித்தார்

அமர்நாத் பனிலிங்கத்தை தரிசித்துக் கொண்டிருக்கும் போது 7 அல்லது 8 அடி உயரமுடைய ஒரு மனிதர் தோன்றி மறைந்ததாகவும் இதனையடுத்து தனக்கு ஒரு ஆசரீரி கேட்டதாகவும் அந்த ஆசரீரியின் படி பாதாளத்தில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபடுமாறும் கட்டளையிட்டதாகவும் சுவாமிகள் எம்மிடம் தெரிவித்தார்.



அந்த ஈசனே என்னை நேரில் ஆட்கொண்டதாக அவர் கூறினார். இதன் அடிப்படையிலேயே அவர் 48 நாட்கள் கடின தவமிருந்து இந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ததாக அவர் தெரிவித்தார்.



கிரிஷாந்

## வாரம் ஒரு படைப்பாளி



# கவிஞர் அக்கரை மாணிக்கம்

**வயிரமுத்து ஞானமாணிக்கம்** என்ற இயற்பெயரைக் கொண்டிருந்த கவிஞர் அக்கரை மாணிக்கம் அவர்கள் 05.12.1939 ஆண்டு அக்கரைப்பற்றில் பிறந்தார்.

அவரது 83 ஆவது பிறந்தாள் 05. 12. 2021 அன்று கடந்தது. அமரர் அக்கரை மாணிக்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் சிரேஷ்ட பாடசாலை பத்திரப் பரீட்சையில், அவர் சித்தியடையும் வரை அக்கரைப்பற்று இராம கிருஷ்ண மிஷன் வித்தியாலயத்திலேயே கல்வி கற்றார்.

தபால் அதிபராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற அவர், புகழ் பூத்த கலைஞராக இருந்து 12. 01. 2019 ஆம் ஆண்டு மறைந்தார்.

1950 களில் வீரகேசரி, சுதந்திரன், தினகரன் ஆகிய பத்திரிகைகளின் மாணவர் பகுதியில் எழுதத் தொடங்கியதன் மூலம் எழுத்துலகில் இவர் கால் பதித்தார்.

1956 இல் இவர் எழுதிய ‘கன்னித் தமிழன் கதைகேழு’ என்ற கவிதை அன்று பலரது பாராட்டையும் பெற்றது. குறிப்பாக பத்திரிகையாளர் எஸ். டி. சிவநாயகம் அவர்கள் கொடுத்த பாராட்டுகள்தான் இவரை தொடர்ந்து எழுதத் தூண்டியது என்று இவர் குறிப்பிட்டு சொல்லுவார்.

இவர் மறையும் வரை தொடர்ந்து எழுதியவர் . அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இவர் எழுத்துலகில் இருந்து இலக்கியம் படைத்தவர்.

நான் எண்பதுகளின் ஆரம்பத்தில் இவருடன் நன்கு பழகும் வாய்ப்பை பெற்றேன்.

பாண்டிருப்பில் சில வருடங்கள் இருந்தபோது இந்த வாய்ப்பு கிடைத்தது. அக்கரை மாணிக்கம் அவர்கள் பாண்டிருப்பில் திருமணம் முடித்து அங்கேயே வாழ்ந்து வந்தவர்.

மரபுக் கவிதையில் மிகுந்த ஆற்றல் கொண்ட இவர் பல நூறு கவிதைகளை எழுதியவர். ‘களம் பொலியட்டும்’ என்ற கவிதை, இவரது பிறந்த ஊரான அக்கரைப்பற்று மண்ணின் பெருமை சொல்லும் கவிதையாகும்.

இவர் பல இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசில்கள் வாங்கியுள்ளார். கவிதை, கட்டுரை, சிறு கதை என இலக்கியதின் பல துறைகளிலும் தடம் பதித்த இவர் நாட்டுக் கூத்திலும் நாடகத்திலும், இசைத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இது எனக்கு நன்கு தெரியும்.

எனது ஒரு சில இசை அல்பங்களை இவர் கேட்டு, அது பற்றி ஆய்ந்து அறிந்து கருத்துகள் சொன்னவர்.

பல அமைப்புகளாலும், மன்றங்களாலும் இவரின் கலைச் சேவைக்காகவும், கவிதைகளுக்காகவும் பாராட்டுக்கள், விருதுகள் பற்றுள்ளார்.

இவர் சமூகத்தை பாதிக்கும் விடயங்கள் குறித்து பல கவிதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் மலைநாட்டில் பணிபுரிந்தபோது மலையக மக்களின் துயர் கண்டு ‘எங்கள் கவலைகள் தீருமா?’ என்று மக்கள் மனம் கொதிப்பதுபோல் கவிதை எழுதினார்.

ஜனரஞ்சகமான கலைஞரும், கவிஞருமான இவர் மூவின மக்களிடமும் செல்வாக்கு பெற்று இருந்த இவர் அம்பாறை மாவட்டத்தின் மாணிக்கம் என்று பலராலும் போற்றப்பட்டவர்.

இவருக்கு ‘கலை ஒளி’, ‘தமிழ் சுடர்’, ‘கலைஞானி’, ‘கலாஜோதி’, ‘அருட் கவிஞர் அக்கரை மாணிக்கம்’, ‘கலாபூஷணம்’, ‘சாகித்திய விருது’, ‘தேச கீர்த்தி விருது’ என்று பல விருதுகளும் பட்டங்களும் கிடைத்துள்ளன.


ஆலயங்கள் தோறும், வித்தியாலயங்கள் தோறும் ஆன்மீக சொற்பொழிவுகளாலும், இலக்கிய பேச்சுகளாலும் ஒலித்துக் கொண்டிருந்த அக்கரை மாணிக்கம் அவர்களின் குரல் அடங்கிப்போனது.

ஆம், அவர் இன்று எம்மிடையே இல்லை. இருந்தாலும் அவரின் படைப்புகளும். அவரது நினைவுகளும் என்றும் எம்முடன் வாழும்.

**வாழ்க அவரது புகழ் நாமம்.**

**கோவிலூர் செல்வராஜன்**

# நூல் அறிமுகம்




திருகோணமலையின் கவிஞர் வி. மைக்கல்கொலின் அவர்களால் படைக்கப்பட்ட “சிலுவைகளே சிறகுகளாய்” கவிதைத் தொகுப்பானது 1995இற்கு முன்னரும் பின்னருமான ஈழத்திலே நிகழ்ந்த போர்க் காலச் சூழலை படம்பிடித்துக் காட்டுவதாய் படைக்கப்பட்டுள்ளது.

ஓரிரு கவிதைகள் அகம் சார்ந்த காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தாலும் ஏனைய கவிதைகள் புறம் சார்ந்த போர் நிகழ்வுகளால் ஏற்பட்ட துன்பியல் நிகழ்வுகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

கவிஞர் வாழ்ந்த காலப் பகுதி போர் மயமானது. அதிலிருந்து மீள முடியாமல் வெளிவந்து தெறித்து விழுந்த கண்ணாடிச் சிதறல்களே இக்கவிதைகளின் அடிநாதமாய் அமைந்துள்ளது.

**“ஆயுதங்கள் மனிதனை விட**
**போற்றப்படுகையில் ஆட்களின்**
**அடையாளங்கள் அறியாமல்**
**துப்பாக்கிகள் வெடிக்கையில்**
**நீயும் என்ன, நானும் என்ன**
**நீதியும் சேர்ந்தே மௌனிப்போம்**
**எமது மரணம் என்றைக்காவ**
**தொருநாள்**
**பெரிதென மதிக்கப்படுகையிலே**
**எம் கல்லறை திறந்து**
**உயிர்த்தெழுவோம்**
**இரண்டாவது இயேசுவாய்”**

என்ற படிமக் கவிதைகளினூடாக நீதியே கிடைக்காமல் மரணித்த, மரணித்துக் கொண்டிருக்கும் உயிர்களின் மரண ஓலங்களை தனது கவிதையில் ஏற்றிப் பாடியிருக்கின்றாலர்.

இது போர்கால விரக்தியின் உடும்புப் பிடியிலிருந்து வெளிவர முடியாமல் அநீதியின் கைவிலங்கு உடைபடும் தருணத்தையெண்ணியும், நாட்டில் சமவுரிமை கிடைத்து விட வேண்டும் என்ற இலக்கை எண்ணியும் காத்திருக்கும் கவிஞரின் நீதிக்காக ஏங்கும் மனக்குமுறல்கள் தீர வேண்டும் என்பதே ஆசிரியர் எதிர்பார்க்கும் அல்லது தீர்க்க முயற்சிக்கும் பிரச்சினையாகவுள்ளது.

வருங்கால சந்ததியினருக்கான போர்க் கால ஆவணப்புத்தகமாய் சஞ்சரிக்கப் போகும் இக்கவிதைத் தொகுப்பு கவிஞர் மைக்கல்கொலினின் சிறந்த படைப்பாகும்.

# வீழினும் உரமாகவே...

**என் இறக்கைகள்**
**உதிரும் போதும்**
**இப் பூமிக்கே**
**உரமாக்குவேன்......**

**என்னை நீங்கள்**
**வெட்டிச் சாய்த்தாலும்.....**

**உங்களுக்காகவே**
**பரிசளிப்பேன்**
**என் சந்ததிகளை...**

**ஒற்றை விண்ணப்பம்...**

**இம் மண்ணையாவது**
**மூடாதிருங்கள்...!**

**கட்டிடக்**
**காடுகளால்.....**

**எங்கள் சந்ததிக்காக**
**அல்ல...**

**உங்கள் சந்ததி**
**மேலோங்கிடவே...**

**கனக தீபகாந்தன்**

# கொரோனாவிலிருந்து காப்பாய்!

வாராயோ பரந்தாமா! வருந்துகின்ற
வையகத்தை கொரோனாவிலிருந்து காக்க!
தாராள சிந்தையுள்ள கோவிந்தா, உன்
தயவொன்றே உயிர்காக்கும் மருந்தேயாகும்!
சீரான வாழ்விழந்து சிறப்பிழந்து
சிரிப்பிழந்து வாழ்பவர்கள் பிணியைப் போக்க
காராம்பூ மேனியனே கமலக் கண்ணா
கடுகதியாய் வந்திங்கு கருணை செய்வாய்!

வானத்தைக் கூரையெனப் படைத்து, இந்த
வையகத்தை எழிலாகப் படைத்திருந்தும்
ஆனவரை அல்லலின்றி வாழ்வதற்கு
அகிலத்தார் படும்பாட்டை அறிவாய் கோவே!
சீனத்தில் தொடங்கியதாய் செப்புகின்றார்
சிறிலங்கா எம்நாடும் தப்பவில்லை!
தானத்தில் சிறந்ததுதான் இரத்ததானம்,
தவிக்கின்ற நிலையறிந்தும் ஏனோ மோனம்?

தடியூன்றும் முதியவர்கள்; கன்னிப் பெண்கள்
தக்கதிடம் மிக்கவராம் இளைஞர்;சேய்கள்-
முடிவில்லா விதமாக முடியும் காட்சி
முழுவதையும் கண்ணாலே காணும் காலை;
படிப்படியாய் அச்சமைப் பற்றிக்கொள்ளும்
பகலிரவாய் தூக்கமதும் தூரம் போகும்!
விடிவளித்து கொரோனாவாம் இருளைப்
போக்கி,
வியனுலகம் ஒளிகண்டு மகிழச்செய்வாய்!

**அம். கௌரிதாசன்**
**ஆலங்கேணி கிழக்கு**
**கிண்ணியா**




# நிமிடங்களை பொன்னாக்கும் கவிதாயினி அபிவர்ணா

இளம் கலைஞர் அறிமுகம்
கு.கிலசன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் மூங்கிலாறு வடக்கு உடையார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட வினாயகமூர்த்தி மல்லிகாதேவி தம்பதிகளின் மகளாக பிறந்தவர் வினாயகமூர்த்தி அபிவர்ணா. இரண்டு சகோதரர்களுடன் மகிழ்ந்து வாழும் அழகிய குடும்பம்.

ஆரம்பகல்வி தொடக்கம் உயர்கல்வி வரை மு/உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் கற்றவர். தற்போது உயர்கல்வியை பூர்த்தி செய்து அறநெறி ஆசிரியரியையாவும் பகுதிநேர ஆசிரியரியையாகவும் கடமை யாற்றி வருவதுடன் கவிதை, கட்டுரை, ஓவியம், சிறுகதை, பாடல், இலக்கியவிமர்சனம், அறிவிப் புத்துறை,பேச்சு,கவியரங்கம், நடிப்புத்துறை, பண்ணிசை, குறுநாடகம், பட்டிமன்றம், வானொலிநிகழ்ச்சிகள்,சமூகம் சார் நிகழ்வுகள் என்பவற்றில் தன்னை ஈடுபடுத்தி வருவது டன் தேசிய கலை இலக்கிய போட்டிகளில் மூன்று மொழி களிலும் தனது படைப்பு களை படைத்து வெற்றி பெற்றும் உள்ளார்.



சிறு வயதிலேயே கலைத்துறையில் இருந்த ஈடுபாட்டால் தன்னை வளப்படுத்தி 2011 இல் எழுத்துலக பயணத்தை ஆரம்பித்தவர் அபிவர்ணா. தற்போது பல துறைகளிலும் சாதித்து வரும் அவர் சிறந்த படைப்புக்களுக்கான பல விருதுகளை தன்வச மாக்கியுள்ளார்.

அந்த வகையில் காம ராசரின் சிகரம் விருது 2020 இலும் 2021 இல் வெ. நாமக்கல் பிள்ளை விருது, கவிச்சாரல் விருது, சிறந்த கவிஞருக்கான விருது, கவிமதி விருது, கவிமலர் விருது என விருதுகளின் பட்டியல் நீள்கிறது.

இவர் இதுவரையில் வெளியிடப்பட்ட படைப்புக்களாக தாரகைக் கீற்றுகள் எனும் சிறுவர் கதை 2016 இலும் 2018 இல் வெளியிட்ட இரைதேடிய பறவைகள் எனும் கவிதைநூலையும் குறிப்பிடலாம்.

இவர் தொடர்ந்து பல் முகநூல் குழுமங்களில் தமிழ்சார் விடயங்களில் எழுதி வருவது டன் பல்வேறு வெற்றிச்சின்னங்களையும் பெற்றுள்ளார்.

**தனக்கு கிடைக்கும் நேரங்களிலெல்லாம் இலக்கியம்சார் விடயங்களோடு பயணிப் பதோடு மரநடுகை போன்ற சூழல் நேயம் மிக்க செயற்பாடுகளிலும் சிறுவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பான செயற் பாடுகளிலும் தன்னை அர்ப்பணித்து வரும் கவிதாயினி அபிவர்ணாவின் நற்பயணம் இனிதாக அமைய எமது வாழ்த்துகள்.**







# பத்து பக்கம்: மொத்த வாழ்க்கையை சொல்லும் அர்சிதா



மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரின் காவத்தமுனை எனும் கிராமத்தில் முஹமட் அமீர் பாத் திமா றம்சியா தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக பிறந்தவர் அர்சிதா அமீர்.

இவர் ஆரம்பப்பிரிவு முதல் சாதாரண தரம் வரை காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயத்தில் கல்வி கற்றார். உயர் தர கல்வியினை ஓட்டமாவடி பாத்திமா பாலிகாவில் தற்போது கற்றுக் கொண்டு இருக்கிறார்.

சிறுவயது முதலே சாதனை படைக்க வேண்டும் என்ற இலட்சிய கனவோடு பயணிப்பவர்.

பாடசாலையில் கிடைக் கும் சந்தர்ப்பங்களை எல்லாம் தனக்கு சாதக மாக மாற்றி பல போட்டி களில் பங்கேற்றார். ஆரம்பத்திலேயே வெற்றிகள் இவர் காலடி தேடி வரவில்லை. தொடர் தோல்விகளை பலமுறை சந்தித்தும் துவண்டு போகவில்லை. மீண்டும் மீண்டும் தன் முயற்சி யை தொடர்ந்தார். பயிற்சியும் முயற்சியும் நாளுக்கு நாள் கூடவே வெற்றிகள் இவரை நோக்கி மெதுவாக நகர ஆரம்பித்தது.

தோல்விகளை படிக்கற்களாக மாற்ற முயன்றதால் வலயங் களுக்கு இடையில் நடை பெற்ற பேச்சு போட்டிகளில் இரண்டாம் இடம், முதலாம் இடம் என தொடர மாகண மட்ட நாடக போட்டியிலும் பங்குபற்றி முதலிடம் பெற்றார்.

தான் முன்னர் கற்ற பாடச ாலையில் மாணவ தலைவராகவும், மாணவர் கழகத்தின் தலைவராக வும், சுகாதார குழுவின் உப தலைவராகவும் என தலைமைத்துவத்தை ஏற்று செயற்பட் டார்.

தற்போது கல்வி பயிலும் பாடசாலை யில் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டிகளில் இல்லத் தின் விளையாட்டு தலைவியாக வும், கிரிக்கட் எல்லை போன்றவற் றின் அணிகளின் தலைவியாகவும் முகாமையாளராகவும் செயற்பட் டார்.

எழுத்து துறையில் தனக்குள்ள ஆர்வத்தை தனது 17ஆவது வயதில் தானா கவே கண்டறிந்தார். அதன் பின் சிந்தனை துளிகள், சமுகம் பற்றிய சில விமர்சனங்கள் போன்றவற்றை எழுத ஆரம்பித்தார்.

அவரது சில ஆக்கங்கள் கத்தார் மண்ணிலிருந்து வெளியாகும் ‘துணிந்தெழு’ சஞ்சிகையில் வெளி வந்தன.

தன் எழுத்தினால் சமுகத்தில் நல்ல மாற்றத்தை கொண்டு வர விரும்பினார். அதற்கு தன் ஆக் கங்களுக்கு தன் குரலிலேயே உயிரோட்டமளித்தார்.

பின் குழுவாக இணைந்து ‘துருவங்களின் தூகள் கள்’ எனும் வலையொளி பக்கம் ஒன்றினை ஆரம்பித்து அதில் இளையவர்கள் மனதில் உரமூட் டக்கூடிய ஊக்குவிப்பு பேச்சாளராகவும் வலம் வந்து கொண்டிருக்கின்றார்.

விமர்சனங்களும் தலை தூக்கி பார்த்தன. தடை களும் தொடராமலில்லை. ஆனாலும் தடம் மாறா மல் தன் பயணத்தை தொடர்கிறார்.



அதற்கு துணையாக அவருடைய பெற்றோரும் சகோதரியும் சில நல்உள்ளங்களும் வழிகாட்டி நிற்கின்றனர்.

சிறிது சிறிதாக எழுத ஆரம்பித்து, அதன் பின் சமுகம் சார்ந்த காணொளிகளை வெளியிட்டு, இன்று தன் 19 ஆவது வயதில் ‘பத்து பக்கத்தில் மொத்த வாழ்க்கை’ எனும் நூலை ஸ்கை தமிழ் வலை யமைப்பு ஊடாக கத்தார் மண்ணில் வெளியிட உள்ளார்.

**ஊடகம் மற்றும் அரசியலில் கால்பதித்து சமூகத்தில் பல மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்ற கனவோடு இவர் பயணம் தொடர்கிறது. அர்சிதாவின் கனவுகள் மெய்ப்பட எமது வாழ்த்துகள்.**

04ஆம் பக்க தொடர்ச்சி...

# கிழக்கில் சுதந்திர தேர்தல் நடந்தால்
# ஆட்சி அதிகாரம் தமிழர்களிடம்!

அதன் போது மட்டக்களப்புத் தமிழர்கள் எவரும் முஸ்லிங்களின் விருப்பத்திற்குத் தடை போடவில்லை. மட்டக்களப்பில் 26 சதவீதம் சிறுபான்மையாகவுள்ள முஸ்லிம்களுக்காக விட்டுக் கொடுத்தனர்.

**கே: *அன்று நசீர் அகமட் அவர்கள் முதலமைச்சர் ஆவதற்கு கிழக்குத் தமிழர்கள் எதிர்ப்புக் காட்டவில்லை. இன்று மட்டக்களப்பில் நிருவாகப் பயங்கரவாதம் இருப்பதாகப் புதிய கண்டுபிடிப்பொன்றை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அப்படியாயின் பா.உ. அகமட் நசீர் அவர்களது பாசையில் பார்த்தால் ஹரிஸ் அவர்களின் செயற்பாட்டினை என்ன சொல்வது?***

**ப:** மட்டக்களப்பிலுள்ள தமிழர் நிருவாகத்தைப் பயங்கரவாதம் என்று சொல்லும் போது ஆளும் கட்சித் தமிழ் எம்பிக்கள் முறையான பதில்கள் அளிக்கவில்லை. தேவையான போது தமிழர்களை நண்பர்களாக சகோதரர்களாகக் கூறும் நசீர் அகமட் போன்றவர்கள் இன்று பேரின அடிப்படைவாதிகளுடன் நட்புகளை மன்றாடிப் பெற்றுக் கொண்டு, தமிழ் நிருவாகிகளை பயங்கரவாதிகள் என்ற பொருள்படுத்திப் பேசி வருகின்றார்.

அதாவது, தமிழர்களைத் தனக்கு எதிரிகள் போல் காட்டி இந்த அரசாங்கத்தினை உற்ற நண்பர்கள் என்று காட்டி ஏதோ அமைச்சைப் பெறுவதற்கு இவர் பாடுபடுகின்றார். 'நேற்று, இன்று நாளை' என்ற வகையில் சந்தர்ப்பவாதக் கொள்கைகளைக் கடைப் பிடிப்பதால் தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்தாளுகை செய்யலாமேயொழிய முஸ்லிம் மக்களுக்கு நிரந்தரமாக எதனையும் சாதிக்க முடியாது.

பேரின அடிப்படை வாதம் தமிழர், முஸ்லிங்களைப் பிரித்தாள முனைகிறது. அதற்குச் சாதகமாக பா. உ. களான நசீர் அகமட், ஹரிஸ் போன்றவர்கள் செயற்படுகிறார்கள் என்பது புலனாகின்றது. மேலும், அரசியல் யாப்பின் 17 ஆவது 18 ஆவது, 19 ஆவது 20 ஆவது திருத்தங்கள் என்னும் ஒன்றுக்கொன்று முரண்பாடான விடயங்களுக்கு கணிசமான முஸ்லிம் பா.உ.கள் ஆதரவுளித்துள்ளார்கள்.

அன்று ஆளும் கட்சியின் அமைச்சர்களாக இருந்து ஆதரவளித்த முஸ்லிங்கள் இன்று எதிர்க்கட்சியில் இருந்தும் ஆதரவு வழங்கியுள்ளனர். 18 ஆவது, 20 ஆவது யாப்புத் திருத்தங்கள் என்பது ஜனநாயகத்தைப் பல வீனமாக்கி அல்லது அழித்து சர்வாதிகாரத்திற்கு வழிகோலும் திருத்தங்களாகும். அவ்வாறான திருத்தங்களுக்கு ஆதரவுளிப்பதென்பது ஜனநாயகத்திற்கு எதிரான நடைமுறையாகும்.

**நசீர் அஹமட், அமைச்சுப் பதவிக்காக அரச தரப்புடன் ஒட்டி உறவாடுகிறார்**

20 ஆவது திருத்தம் சிங்கள பௌத்த அடிப்படைவாதத்தினை முதன்மைப் படுத்தக்கூடிய விதத்திலும் தமிழ் பேசும் சமூகத்தினை ஓரம் கட்டக் கூடிய விதத்திலும் அமைந்துள்ளது. இதனை அறிந்தும் ஆதரவளித்த தமிழ் பேசும் பா.உ.கள் மக்கள் நலன் பேணவில்லை. தமது சுயநலன்களையே முதன்மைப் படுத்தியுள்ளார்கள். இப்படியானவர்கள் இருக்கும் வரை பேரின அடிப்படைவாதிகளின் இலக்குகள் இலகுவாக நிறைவேறிவிடும்.

இப்போது எதிர்க்கட்சியிலுள்ள 7 முஸ்லிம் பா.உ.கள் அமைச்சு பதவிகளை நோக்கி நகர்வதையே காண முடிகிறது. இதனை புத்தள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெளிப்படையாகக் கூறியுள்ளார். 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு அளித்தால் இராஜாங்க அமைச்சு தமக்குத் தருவதாக அரசாங்கம் கூறியதாகப் பேசியுள்ளார். அந்தப் பாணியில்தான் நசீர் அகமட் அவர்களது அண்மைய செயற்பாடுகள் அமைந்துள்ளன. அதை நம்பித்தான் பங்காளிக் கட்சிகள் விரும்பாது விட்டால் வெளியேறலாம் என்று அரசாங்கம் கூறி வருவதைக் காண முடிகிறது.



5 வருடங்கள் அமைச்சுப் பதவி நோக்கிய அரசியல் எந்த விரோதமான சட்டங்கள் திட்டங்களுக்கும் ஆதரவுளிக்குமோயாழிய மக்களுக்குப் பெரிதாக எதனையும் சாதிக்காது. இவர்கள் அமைச்சர்களாக இருக்கும் போதே முஸ்லிங்கள் அடிபட்ட வரலாறுகள் உள்ளன. ஆயின், அரசியல்வாதிகளின் சுயநலன்கள் மக்களின் பொதுநலன்களாக அமையாது என்பதே யதார்த்த உண்மையாகும்.

**கே: *கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட முடியும் என்பது யதார்த்தமா?***

**ப:** கிழக்கு மாகாணத்தில் ஏறத்தாழ தமிழர்கள் 40% உம், முஸ்லிங்கள் 38% உம், சிங்களவர்கள் 22% உம் உள்ளனர். அந்த வகையில் தனிப்பட்ட இன அடிப்படையிலோ அல்லது தனிப்பட்ட கட்சியோ ஆட்சியதிகாரத்திற்கு வர முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல கட்சிகள் இணைந்துதான் கிழக்கு மாகாண சபையில் ஆட்சியைக் கைப்பற்ற முடியும்.

அந்த வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பெரும்பான்மையாக வாழும் தமிழர் சமூகத்தில் இருந்து அதிகளவான வாக்குகளையும் ஆசனங்களையும் பெற வாய்ப்புள்ளது. 2012 இல் 11 ஆசனங்களை த.தே. கூட்டமைப்பு பெற்றிருந்தது. சுமார் 6500 வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு ஆசனத்தையும் போனஸ் ஆசனங்கள் இரண்டையும் எமது கட்சி இழந்திருந்தது.

தேர்தல் வாக்குக் கணிப்பில் திட்டமிட்ட முறைகேடுகள் நிகழாதிருந்தால் 14 ஆசனங்கள் த.தே. கூட்டமைப்புக்குக் கிடைத்திருக்கும். அவ்வாறு கிடைத்திருந்தால் வேறு கட்சிகளிடம் இருந்து ஐந்து ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைப்பதற்கு வாய்ப்பு அதிகம் இருந்திருக்கும். ஆனால், மத்தியில் ஆட்சியதிகாரத்தில் இருந்த மகிந்தவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கைகோர்த்த முஸ்லிம் காங்கிரஸ், ஆட்சிப் பீடம் ஏறியது.

2015 இன் பின்னர் ஆட்சி மாற்றத்தை அடுத்து, எந்தக் கட்சியுடன் சேர்ந்தாவது ஆட்சியில் தான் இருக்க வேண்டும் என்ற கொள்கையுடைய முஸ்லிம் காங்கிரஸ் மேலும் சில முஸ்லிம் உறுப்பினர்களுடன் சேர்ந்து தனது 7உறுப்பினர்களுடன் மொத்தமாக 11 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களின்ஆதரவைப் பெற்றிருந்தது. இந்த நிலையில், மீண்டும் முதலமைச்சர் ஆகக் கூடிய சாத்தியம் ஏற்பட்டது.

எதிர்வரும் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தேர்தல் முறைகேடுகள் இல்லாத விடத்து மாகாண சபையில் 12 இற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில், மேலும் சில ஆசனங்களைச் சாதகமான கட்சிகளிடம் பெற்றுக்கொண்டு, முதலமைச்சர் பதவியைப் பெறுவதற்குச் சாத்தியம் உள்ளது.

தற்போதைய ஈராண்டுகள் ஆட்சிக்காலத்தில் பொது சன பெரமுனக் கட்சியும், அதன் தோழமைக்கட்சிகளும் தமது செல்வாக்கினை இழந்துள்ளது. அதன் தாக்கம் மாகாணசபைத் தேர்தலிலும் பிரதிபலிக்கும். அந்த நிலையில், எந்தக்குறுக்கு வழிகளிலாவது ஆட்சியைக் கைப்பற்ற இந்த அரசாங்கம் முயற்சிக்கும். சுயாதீனமான சுதந்திரமான தேர்தலுக்கான நடைமுறையை 20வது யாப்புத் திருத்தம் மீறியுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச தேர்தல் கண்காணிப்புடன் தேர்தல் நடந்தால் மட்டுமே சரியான மக்கள் தீர்ப்பினை எதிர்பார்க்க முடியும். தவறுமாயின், பேரினவாத அடிப்படையான இந்த அரசாங்கம் தமது இனம் சார்ந்த கிழக்கு மாகாணத்தில் 22% ஆகவுள்ள சிங்களவர் ஒருவருக்கே பதவி கிடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

03ஆம் பக்க தொடர்ச்சி...

## பதிவு செய்வதில் தமிழ்...

தமிழரசுக் கட்சியின் தன்னாதிக்க சிந்தனையுடன் கூடிய அரசியல் காய்நகர்த்தல்களும் விட்டுக்கொடுக்காமையும் தான் உட்கட்சி முரண்பாடுகள் கூர்மை அடையக் காரணமாக அமைந்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைப் பதவியை தன் கையில் வைத்துக் கொண்டு, தமிழரசுக் கட்சியை கட்டுப்படுத்தாமல் இருப்பது, மூத்த அரசியல்வாதியான சம்பந்தனின் ஆளுமையை கேள்வி கேட்க வைத்திருக்கிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டாமைக்கு, தலைவர் சம்பந்தனுக்கு பெரும்பங்கு இருக்கிறது. இந்த விடயத்தில், அவர் மறுத்தால் கூட, அரசியல் தேசிய தலைமை என்பதனால், அவருக்கு கூடுதல் பொறுப்பு இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில், பொதுத் தேர்தல்களில், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே கூடுதலாக களமிறக்கப்பட்டார்கள். இந்தக் கூட்டமைப்புக்குள் தங்களது ஆதிக்க சக்தியை வலுப்படுத்துவதற்காக, இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் இதற்கான நகர்வுகளை கட்சி மட்டத்தில் முன்னெடுத்தார்கள். இதனால், தமிழரசுக் கட்சி கூடுதல் பாராளுமன்ற ஆசனங்களை தொடர்ச்சியாக பெற்று வந்தது.

இதனால், தமிழரசுக் கட்சி தலை, கால் தெரியாமல் நடந்து கொள்வதும், கூட்டணி கட்சிகளுக்கு தெரியாமல் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதும், கூட்டணிக் கட்சிகளை புறந்தள்ளி செயல்படுவதும், கூட்டணிக் கட்சிகளுக்குள் தொடர்ச்சியாக அதிருப்தியை ஏற்படுத்தியே வந்தது. இப்படி, உள் முரண்பாடுகளை உச்சம் அடையச் செய்ததில் தமிழரசுக் கட்சி தான் காரணமாக இருந்திருக்கிறது. இன்றும் அதே நிலைதான் தொடர்கிறது.

உள்முரண்பாடுகள்ஏற்படுவதைத்தடுப்பதும்,சகிப்புத் தன்மையோடு கட்சிகளை அரவணைத்துக் கொண்டு செல்வதுமே உண்மையான தலைமையின் நற்பண்பாகும்.

ஆனால், சம்பந்தனும் சொல்வதை கூட்டணிக் கட்சிகள் கேட்டால் சரி என்ற நடைமுறைதான் இப்போதும் பின்பற்றப்படுகின்றது. இதனால், இன்று கட்சி பலவீனம் அடைந்து வருவதோடு, ஆசனங்களும் குறைவடைந்து இருக்கின்றதென்பது, மூத்த அரசியல்வாதி சம்பந்தனுக்கு புரியாமல் இல்லை.

இரண்டு கட்சிகள் கூட்டணியில் இருந்து விலகிய நிலையில், டெலோ, புளட் தமிழரசுக் கட்சி ஆகிய மூன்றுமே இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து செயல்படுகின்றன. இந்த உள் முரண்பாடுகள் முற்றிய நிலையிலும், இரு கட்சிகளும் சம்பந்தன் தலைமையில் பயணிக்கிறார்கள். டெலோ, புளொட் ஆகிய இரு கட்சிகளின் பொறுமையும் தமிழ் தேசியத்தை இலக்காகக் கொண்ட செயல்பாடும், கூட்டமைப்புக்குள் மார்பை நிமித்தி நிற்கின்ற தமிழரசுக் கட்சிக்கு புரியுதோ? புரியவில்லையோ? தெரியாது.

அரசியல் சிரேஷ்டத்துவம், அனுபவம், முதுமை ஆகியவற்றை மதித்து, இவர்கள் கட்சி இணக்க அரசியலுக்குள் பயணிக்கும் டெலோ, புளட் ஆகிய கட்சிகள், கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள்.

மனோ கணேசனின் தலைமையை பார்த்தாவது, சம்பந்தன் ஐயா தன்னை திருத்திக் கொள்ளவேண்டும்.

காரணம் கூறாமல் கட்டியணைத்து விட்டுக் கொடுப்புடன் செயல்பட வேண்டிய பொறுப்பும் சம்பந்தன் ஐயாவுக்கு நிறையவே இருக்கிறது. மக்கள் உங்களை உச்சியில் வைத்து அழகு பார்க்கிறார்கள். இலக்கும் எதிர்பார்ப்பும் ஒன்றாக இருந்தால், கூட்டமைப்பை பதிவு செய்து முன் நோக்கிச் செல்வதில் என்ன பிரச்சனை இருக்கிறது.

# மியன்மாரில் குழி தோண்டிப் புதைக்கப்படும் ஜனநாயகம்

# சூகிக்கு எதிராக 12 வழக்குகள் தாக்கல்



ஆட்சியில் இருந்து நீக்கப்பட்ட மியான்மார் நாட்டுத் தலைவி ஆங் சான் சூகிக்கு நான்கு வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

76 வயதான, சமாதானத்திற்கான நோபல் பரிசு வென்ற ஆங் சான் சூகி மியன்மார் அரசின் ஆலோசகராகவும், தலைவராகவும் இருந்து வந்தார்.

மியான்மரில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்துவிட்டு, கடந்த பெப்ரவரி 01ஆம் திகதி அந்நாட்டு இராணுவம், ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. அதைத் தொடர்ந்து, நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் உள்ளிட்ட பல முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகளை இராணுவம் கைது செய்தது.

அப்போது முதல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஆங் சான் சூகி மீது, தகவல் தொடர்பு சாதனங்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்தமை, 2020 தேர்தல் பிரசாரத்தின்போது கொவிட் கட்டுப்பாட்டு விதிமுறைகளை கடைபிடிக்காததன் மூலம் தேசிய அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, இது தொடர்பாக விசாரணை நடாத்திய மியன்மார் நீதிமன்றம், குறித்த இரு குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் ஆங் சான் சூகிக்கு தலா 2 வருடங்கள் வீதம் 4 வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதி, வின் மைன்டுக்கும் அதே குற்றச்சாட்டுகள் தொடர்பில் 4 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஆங் சான் சூகி எப்போது சிறையில் அடைக்கப்படுவார் என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, இராணுவ ஆட்சியாளர்களால் ஆங் சான் சூகிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 வழக்குகளில் ஒரு வழக்கிற்கான தீர்ப்பே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 100 வருடங்கள் வரை சிறைத் தண்டனை வழங்கப்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஆங் சான் சூகிக்கு வழங்கப்பட்ட தண்டனை தொடர்பில் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

இதேவேளை, மியன்மாரில் இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் 1,300 இற்கும் அதிகமானோர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளதோடு, 10,000 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## தாலிக்கொடி, தங்க ஆபரணங்கள் கொள்ளையிட்ட பெண் பூசாரி

### மட்டு தாளங்குடா வில் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

**(கனகராசா சரவணன்)**

மட்டு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள தாளங்குடா பிரதேசத்தில் வீடு ஒன்றில் கால் செய்தற்கான பூஜை செய்யச் சென்று அங்கிருந்த தாலிக்கொடி, தங்க சங்கிலி உட்பட சுமார் 10 இலச்சம் ரூபா பெறுமதியான 7 கால் பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற பெண் பூசாரி ஒருவரை இன்று வெள்ளிக்கிழமை (10) கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் தமது வீட்டை காவல் செய்வதற்கான சடங்கு பூஜை ஒன்றை செய்வதற்காக சம்பவதினமான கடந்த 8ம் திகதி புதன்கிழமை கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்பூசாரியை வரவழைத்து இரவில் தங்கவைத்து பூஜை நடவடிக்கை இடம்பெற்ற பின்னர் காலையில் பெண் பூசாரி அங்கிருந்து சென்றுள்ளார்.

இந்த நிலையில் வீட்டின் அலுமாரியில் கழற்றி வைத்திருந்த 6 பவுண் நிறை கொண்ட தாலிக்கொடி, ஒரு பவுண் நிறை கொண்ட தங்க சங்கிலி, கால் நிறை பவுண் கொண்ட மோதிரம் திருட்டுப்போயிருந்துள்ளது

இதனையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் நிலைய பெருங்குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சப்-இன்பெக்டர் வை. விஜயராஜா தலைமையிலான பொலிசார் விசாரணையை மேற்கொண்ட நிலையில் கொக்கட்டிச்சோலையை சேர்ந்த 31 வயதுடைய பெண் பூசாரியை கைது செய்ததுடன் அவர் திருடிச் சென்ற தங்க ஆபரணங்களை ஈடுவைத்து பினான்ஸ் கொம்பனி மற்றும் தங்க நகை கடைகளில் இருந்து கொள்ளையிட்ட தங்க ஆபரணங்களை மீட்டனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட பெண் பூசாரி அக்கரைப்பற்று, கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி பொலிஸ நிலையங்களில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளார்.

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட வரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## நுரைச்சோலையில் மின் உற்பத்தி வழமைக்கு திரும்பியது

நுரைச்சோலை அனல் மின் நிலையம் முழுமையாக இயங்கி வருவதால் இன்று முதல் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் 04ஆம் திகதி நாட்டின் பிரதான மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, நாடளாவிய ரீதியில் பல மணி நேரத்திற்கு மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

குறிப்பாக நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலுள்ள 3 மின் உற்பத்தி கட்டமைப்புகளிலிருந்து தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கும் சுமார் 900 MW மின் சக்தி விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டதனால், பி.ப. 6.00 மணி - பி.ப. 9.00



மணி வரையான காலப்பகுதியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒரு மணித்தியால மின் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக, சபை தெரிவித்துள்ளது.

## குற்றச்சாட்டுக்களின்றி...

**கலாநிதி சுரேன் ராகவன் எம்பி**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், தங்களது வாழ்க்கையின் அரைவாசியை சிறையில் கழித்து விட்டனர். யுத்தம் முடிந்து 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் முஸ்லிம் சிங்கள கைதிகளில் பெரும்பாலானவர்கள் எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தாமதிக்கும் நீதி நிராகரிக்கப்பட்ட நீதிக்கு சமம். இவ்விதம் வெளிநாட்டு அழுத்தங்களுக்கும் நாம் தலை துணியாது, மனிதாபிமான அடிப்படையில் இவர்களது பிரச்சினை அணுகப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும்.

நீதிமன்றத்தின் முன் இவர்கள் நிறுத்தப்பட்டு, குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட வேண்டும். எப்படித்தான் இவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டாலும், தண்டனை காலம் குறைக்கப்பட வேண்டும். ஏனென்றால், இவர்களது வாழ்க்கையின் அரை நூற்றாண்டை சிறைச்சாலையிலேயே கழித்து விட்டவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள்.

அதேநேரம் சிறைகளில் இருந்து விடுவிக்கப்படுவார் தேசிய திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும். இவ்வாறு கலாநிதி சுரேன் ராகவன் உரையாற்றினார்.

**ரிஷாட் பதியுதீன் எம்பி**

''பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அநியாயமாக கைது செய்யப்பட்டு, சிறையில் வாடும் தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்களவர்களை விடுதலை செய்ய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் அநியாயமாக சிறைகளில் வாடுகின்றனர். கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களில், சுமார் 12,000 பேர் யுத்த முடிவின் பின்னர், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், அதைவிட சிற்சில காரணங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள், இன்னும் குற்றப் பத்திரிகைகள் கூட தாக்கல் செய்யப்படாமல் தசாப்தகாலமாக சிறையில் வாடுகின்றனர்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூட அண்மையில் பேசும்போது, ''இந்த விடயத்தை கட்டம் கட்டமாக முன்னெடுப்போம்' என உறுதியளித்தார். நான் சிறையில் இருக்கும் போது என்னிடம் வந்து அவர்கள் வேதனைப்பட்டனர்.

அவர்களின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பல வழக்குகள், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் அல்லது விசாரணையின்றியும் இருக்கின்றது. சிங்கள இளைஞர்கள் கூட இந்தச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சிறையில் காலத்தைக் கடத்துகின்றனர்.

தமிழ் இளைஞர்கள் பலரின் எதிர்காலமும் கேள்விக்குறியாக மாறியிருக்கின்றது. கடந்த இரண்டு வருட காலத்துக்குள் சுமார் 40 அல்லது 50 இளைஞர்கள், 'புலிகளின் மீளெழுச்சியில் தொடர்புபட்டார்கள்' என கைது செய்யப்பட்டு, பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

20, 22 வயது நிரம்பிய இந்த இளைஞர்களுக்கு புலிகள் தொடர்பில் பெரிதாக தெரிந்திருப்பது நியாமில்லை. ஏனெனில், 2009 இல் யுத்தம் முடிந்தபோது, அவர்கள் சுமார் 10 வயது நிரம்பியோர்களாகவே இருந்திருப்பர். வட்ஸ்அப்களிலும், சமூக வலைத் தளங்களிலும் வருகின்ற செய்திகளை பரிமாறியதற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்த இவர்களுக்கு வழக்காடுவதற்குக் கூட வழி இல்லை. எனவே, அவர்களின் விடுதலையிலும் சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பலர் கைது செய்யப்பட்டனர். அதில், சுமார் 40 அல்லது 45 பேருக்கு மாத்திரமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 250 பேர் அளவில், இன்னும் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சிறையிலே வாடுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், ஒருநாள் வகுப்பு அல்லது செயலமர்வு ஆகியவற்றுக்கு, எதுவுமே அறியாது சென்றதனாலும், சிறிய காரணங்களுக்காகவுமே, பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு பிணை வழங்குவது பற்றி நீங்கள் சிந்திக்க முடியும். அவர்களின் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, வழக்குகள் நிறைவடைய நீண்டகாலம் எடுக்கலாம்.

ஏற்கனவே, வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டவர்களுக்கு 23,000 குற்றச்சாட்டுக்கள் வரை இருப்பதாக நாம் அறிகிறோம். எனவே, இவற்றை விசாரிக்க இன்னும் எத்தனை வருடங்கள் ஆகுமோ தெரியாது. இவ்வாறு அவர் கூறினார்.